சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

பு.சா.1 திரு. பிரபாகரன் த /பெ திரு. மாதேஷ்வரன் , வயது .40 ( எதிரி ஆஜர்)

**குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணை .–**

01. எதிரி எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் எதிரியின் கணவர் பார்த்திபன் என் நண்பர் ஆவார். என் சொந்த ஊர் போச்சம்பள்ளி ஆகும். நான் 16 ஆண்டுகளாக திருப்பத்தூரில் குடியிருந்து வருகிறேன். 16 ஆண்டுகளாக எதிரியின் கணவர் எனக்கு நண்பர் என்றால் சரிதான். 16 ஆண்டுகளுக்கு முன்பு எதிரியின் கணவர் என்ன தொழில் செய்து வந்தார் என்று எனக்கு தெரியாது. எதிரி JP மென்ஸ் வேர் என்ற அவரது கடையில் அபிவிருத்திக்காக என்னிடம் கடன் கேட்டார். எப்போது கடன் கேட்டார் என்றால் காசோலை கொடுப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு கடன் கேட்டார். இந்த கடையை எதிரி பணம் கேட்பதற்கு முன்பு 5 வருடங்களாக நடத்தி வருகிறார். அந்த கடையில் உரிமையாளர் எதிரியின் கணவர் பார்த்திபன் என்றால் சரிதான். எதிரி இல்லத்தரசி என்றாலும், அவர் தொழில் செய்வதில்லை என்றாலும் இருவரும் சேர்ந்து தான் கடையை நடத்தி வந்தார்கள். அந்த கடையில் வேலையாட்டகள் யாரும் நியமணம் செய்யப்படவில்லை என்றாலும், எதிரியின் கணவரே நடத்தி வந்தார் என்றாலும் சரிதான். நான் ஜெராக்ஸ் கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். மாதம் ரூ.80,000/– வருமானம் ஈட்டுகிறேன். நான் வரும் வருமானத்தில் சேமிப்பு செய்து வைப்பேன் என்றாலும்,பொருட்கள் வாங்கி வைப்பேன் என்றாலும் சரிதான்.

02. எதிரி எனக்கு எப்போதில் இருந்து பழக்கம் என்றால் எதிரியும் அவரது கணவரும் என் குடும்ப நண்பர் என்பதால் பல ஆண்டுகள் பழக்கம். எதிரியும் நானும் வேறு ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் நாங்கள் குடும்ப நண்பர்கள் அல்ல என்றால் சரியல்ல. இருவீட்டார் விசேஷங்களிலும் பரஸ்பரம் கலந்து கொள்வோம் என்றால் அவர்கள் என் வீட்டு நிகழ்ச்சியில் கழந்து

கொண்டுள்ளனர். நான் அவர்கள் வீட்டு நிகழ்ச்சியில் இது வரை கலந்துகொண்டதில்லை. நான் எதிரியின் வீட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளாததால் அவரின் வீட்டு சூழ்நிலை தெரியாது என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் கடன் கொடுப்பதற்கு முன்பு அவரது கடையை சென்று பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த கடையில் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். 20.07.2024 அன்று எதிரி என்னிடம் கடன் கேட்டார். கடன் கேட்டு இரண்டு நாட்கள் கழித்து நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். அவ்வாறு 20.07.2024 அன்று எதிரி கடன் கேட்டதாக புகாரில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எதிரி பணம் பெற்றுச்சென்றதாக நான் கூறிய அன்று எதிரியின் கணவர் பணத்தை பெற்று சென்றாரா என்றால் இல்லை. இருவரும் வந்து பணத்தை பெற்றுச்சென்றனர். ரூ. 14,00,000/− கடன் வேண்டும் என்று இருவரும் தனித்தனியாக என்னிடம் கடன் கேட்டனர். இருவரும் ஒரே நாளில் தனித்தனியாக கடன் கேட்டனர். அவர்களுக்கு தனித்தனியாக தலா ரூ. 7,00,000/− கடன் கேட்டேன்.

03. எதிரியும் அவரது கணவரும் ஒரே கடையை நடத்தி வருவதால் இருவருக்கு தனித்தனியாக கடன் கொடுக்க வேண்டிய தேவை இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் வட்டிக்கு பணம் கொடுக்க வில்லை என்றால் சரிதான். ஆனால் என்னுடைய மனுவில் வட்டிக்கு பணம் கொடுத்ததாக தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் கூறுவது போல் மூன்று மாதம் கழித்து காசோலை கொடுத்திருந்தால் அதற்குண்டான வட்டியும் சேர்த்து காசோலையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. அசல் பணம் மட்டுமே பூர்த்தி செய்து காசோலை கொடுத்தார். மூன்று மாதங்கள் கழித்து நான் பணத்தை எங்கு வைத்து கேட்டேன் என்றால் எதிரியின் கடையில் வைத்து கேட்டேன். நான் பணம் கேட்டதில் இருந்து எத்தனை நாட்கள் கழித்து காசோலை கொடுத்தார் என்றால் 1ம் தேதி காசோலை என் வீட்டில் வைத்து கொடுத்தார். அந்த காசோலையை 01.10.2024 அன்றே வங்கியில் செலுத்தினேன். அன்றைய தினம் எத்தனை காசோலைகள் வங்கியில் செலுத்தினேன் என்றால் எதிரியின் காசோலை மட்டுமே செலுத்தினேன். வங்கியில் போதிய பணம் இல்லை என்று காசோலை திருப்பபட்டது. காசோலை திருப்பபட்ட பின்பு 03.10.2024 அன்று எதிரியை நேரில் அணுகி பணம் கேட்டேன். ஆனால் அதற்கு எதிரி பதில் ஏதும்

கூறவில்லை. பின்பு 14.10.2024 நான் என் வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேன். என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ. 01 காசோலையில் என் பெயர் எழுதப்பட்டுள்ள பேனா மையும் எதிரி கையொப்பம் இட்டுள்ள பேனா மையும் வேறு வேறு பேனாக்களால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

//**உண்மை நகல்**//

KODHAVADI SUBRAMANIAN DINESH

Judicial Magistrate No.I Tirupattur
Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Tirupattur

**நீதித்துறை நடுவர் எண். 01**
**திருப்பத்தூர்**